பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
29 07 2026 WEDNESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேர்வு முறைகேடு தடுப்பு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

- சர்வதேச புலிகள் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வன ஆர்வலர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

- குரு பூர்ணிமா இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- ஜப்பானில் நேரிட்ட நிலநடுக்கதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

- உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<<

தேர்வு முறைகேடு தடுப்பு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த மசோதா குறித்து உரையாற்றி வருகின்றனர்.

மக்களவை இன்று கூடியதும், அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் பதக்கங்களை வென்ற Harjinder Kaur, Gulveer Singh உள்ளிட்டோருக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

கேள்வி நேரத்தை அவர் தொடங்க முயன்ற போது, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால், அவை நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியதும், தேர்வு முறைகேடு தடுப்பு திருத்த மசோதா குறித்து விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

மாநிலங்களவை இன்று கூடியதும், நிலக்கரி, சுரங்கம், எஃகு அமைச்சகத்தின் நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.

எதிர்க்கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டதால், அவை முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

சர்வதேச புலிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வன ஆர்வலர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகின் 70 சதவீத புலிகள் இந்தியாவில் உள்ளதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இயற்கையுடன் இணைந்து வாழ்வது நமது கலாச்சார பாரம்பரியம் என்று அவர் கூறியுள்ளார்.

அறிவியல் அடிப்படையிலான திட்டங்கள் மூலம், புலிகள் பாதுகாக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளை பாதுகாப்பதில் வன அலுவலர்கள், விஞ்ஞானிகள், வன ஆர்வலர்களின் பங்களிப்பிற்கு திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள பதிவில், புலிகளை பாதுகாப்பதில் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உள்ள 58 சரணாலயங்களில் 3 ஆயிரத்து 682 புலிகள் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளை பாதுகாப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நமது நாட்டின் பல்லுயிர் பெருக்கத்திற்கு புலிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

புலிகளை பாதுகாப்பதில் நாட்டின் சாதனையை பாராட்டுவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

உலக அளவில் புலிகளை பாதுகாக்கும் வகையில், கடந்த 2010ஆம் ஆண்டு ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்ற உச்சி மாநாட்டின் போது, ஆண்டுதோறும் ஜூலை 29ஆம் தேதி புலிகள் தினமாக கடைபிடிக்க முடிவெடுக்கப்பட்டது.

கடந்த 2010-ஆம் ஆண்டு உலக அளவில் 3 ஆயிரத்து 200 புலிகள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 5 ஆயிரத்து 711-ஆக அதிகரித்துள்ளது.

>>>>>>><<<<<<<

இதனிடையே, புலிகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து தமிழகத்தின் கோவை மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் திரு. கணேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - கணேசன் 57 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

குரு பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்நாளையொட்டி மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், மக்களுக்கு குரு பூர்ணிமா வாழ்த்துகளை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு குருவும் ஞானத்தை மட்டுமின்றி, நேர்மறை எண்ணங்களையும் அளித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நமது கலாச்சாரத்தில் குரு முக்கியமான இடத்தை வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வெளியிட்டுள்ள பதிவில், நமது நாட்டின் கலாச்சாரம், நேர்மை, மனிதயேத்திற்கு எடுத்துக்காட்டாக குரு பூர்ணிமா கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்த குருமார்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

சந்த் சிரோமணி குரு ரவிதாஸ் மகராஜ்-ன் பிறந்தநாளை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

>>>>>>><<<<<<<

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின், மாஹே கல்வி வளாகம் அடுத்த கல்வியாண்டில் திறக்கப்படவுள்ளதாக அதன் துணை வேந்தர் திரு. பிரகாஷ் பாபு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாஹேயின் Chalakkara-வில் 3 ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கான அரசாணை கடந்த ஜனவரி மாதம் 2ஆம் தேதி வெளியிடப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்த கல்வி வளாகம் மூலம் மாஹே, கேரளா மற்றும் தெற்கு கர்நாடகாவைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்கலைக் கழக பதிவாளர் திரு. குணசேகரன், முனைவர் Rajeesh Viswanathan, துணை பதிவாளர் திரு. மகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டதாக திரு. பிரகாஷ் பாபு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

கேரளம் மாநிலத்தில் திருஓணம் பண்டிகை அடுத்த மாதம் கொண்டப்படவுள்ள நிலையில், ஹூப்ளியிலிருந்து சேலம், ஈரோடு, போத்தனூர் வழியாக கோட்டயத்திற்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தென்மேற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

ஹூப்ளியிலிருந்து, ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி மாலை மணி 6.30-க்கு புறப்படும் இந்த ரயில், மறுநாள் மாலை மணி 4.40-க்கு கோட்டயம் சென்றடையும்,

மறுமார்க்கத்தில் கோட்டயத்திலிருந்து இரவு மணி 10.30-க்கு புறப்படும் இந்த ரயில், மறுநாள் இரவு 8 மணிக்கு ஹூப்ளி சென்றடையும்,

இதேபோல். அடுத்த மாதம் 29ஆம் தேதி ஹூப்ளியிலிருந்து கோட்டயத்திற்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இதனிடையே, ஹூப்ளி - ராமேஸ்வரம் இடையேயான வாராந்திர சிறப்பு ரயில், ஆகஸ்ட் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தோறும், ஹூப்ளியிலிருந்து காலை மணி 6.50-க்கு புறப்படும் இந்த ரயில், ஓசூர், சேலம், திருச்சி, சிவகங்கை வழியாக மறுநாள் காலை மணி 5.20-க்கு ராமேஸ்வரம் வந்தடையும்.

மறுமார்க்கத்தில் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு புறப்படும் ரயில், மறுநாள் இரவு மணி 7.40-க்கு ஹூப்ளி சென்றடையும்,

>>>>>>><<<<<<<

ஜப்பானில் நேரிட்ட நிலநடுக்கதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

தென்மேற்கு ஜப்பானின் Kumamoto பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு பிரதமர் திருமதி. Sanae Takaichi தெரிவித்துள்ளார்.

40 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவை துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இப்பகுதிகளில் Shinkasen புல்லட் ரயில் சேவை முற்றிலும் ரத்து செய்யப்பட்டுள்ளது. விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

Hormuz நீரிணை வழியாக செல்லும் வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஐ.நாவிற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. Harish கூறுகையில், அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

செர்பியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் கலப்பு குழு பிரிவில், இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>>><<<<<<<

தாய்பே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எச்.எஸ் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-14 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Minoru Koga-வை வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் *Anmol Kharb, Unnati Hooda, Tanvi Sharma* ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியின் குழுப் பிரிவில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

கனடாவில் நடைபெறும் இப்போட்டியில், ஆடவர் அணி 2-1 என்ற கணக்கில் குவைத்தை வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் அணி 3-0 என்ற கணக்கில் தென்னாப்பிரிக்காவை வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<